**கட்டான பிரதேச சபை**
**கம்பஹா மாவட்டம்**

-------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தபோதும், திருத்தஞ் செய்யப்பட்ட கணக்குகள் 2019 மே 06 ஆந் திகதியன்று கணக்காய்வு கிடைக்கப் பெற்றிருந்துடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 யூன் 28 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஆகஸ்ட் 29 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கட்டான பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### (அ) கணக்காய்வுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | முன்னைய ஆண்டில் தவறுதலாகக் கணக்கிலிடப்பட்ட பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 48,245,670 ஆகும். அதனைத் திருத்தம் செய்யும் போது மீளாய்வாண்டின் முத்திரை வருவாயில் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. | திரண்ட நிதியத்தில் சரிவர சீராக்கல் செய்யப்பட வேண்டும். | தீர்ப்புக்காக பொதுக் கூட்ட அனுமதி கோரப்பட்டுள்ளது. |
| (ii) | மூன்று தேவைகளுக்கு மீளாய்வாண்டில் செலவழித்த ரூபா 2,605,466 மூலதனமாக்கப்படவில்லை. | வேலை முடிவில் மூலதனமாக்கப்பட வேண்டும். | அவை நிலையான சொத்துப் பதிவேட்டிலிடப் பட்டுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | கையிருப்புப் பெறுமதியாகிய ரூபா 6,332,636 கணக்கிலிடப்படுவதற்குப் பதிலாக புத்தகப் பெறுமதியாகிய ரூபா 8,599,237 கணக்கிலிடப்பட்டிருந்தது. | உருப்படிக் கையிருப்பு கணக்கிலிடப்பட வேண்டும். | கையிருப்புக்குரிய கொடுக்கல் வாங்கல்கள் சரிவரக் கணக்கிலிட்பட வேண்டும். |

**(ஆ) கணக்கிணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட 03 கணக்கீட்டு விடயங்களுக்கும் அவற்றிற்குரிய துணைப் பதிவேடுகளுக்குமிடையே ரூபா 20,680,413 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | கணக்கில் உள்ள மீதி வேறுபாடுகள் இணக்கஞ் செய்யப்பட்டு திருத்தஞ் செய்யப்பட வேண்டும். | 2019 இறுதிக் கணக்கில் திருத்தப்படும். |

**(இ) பெற வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 11 வேலைகளின் பொருட்டு 10 ஆண்டுகளுக்கு மேலாகப் பெற வேண்டியுள்ள ரூபா 142,324 மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பெற வேண்டிய மீதிகள் அறவிடப்பட வேண்டும். | பத்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலுவை ஆகும். |

**(ஈ) கணக்காய்விற்குத் தேவையான ஆவணச் சான்றின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மூன்று கணக்கீட்டு விடயங்களின் ரூபா 159,806,005 க்குரிய பட்டோலையும் காலப்பகுப்பாய்வும் சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை. | மீதிகளை உறுதி செய்யும் தகவல்கள் வழங்கப்பட வேண்டும். | கணக்கு தீர்வு செய்யப்பட்டு பட்டோலை வழங்கப்படும். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| 2017 மே 25 ஆந் திகதிய LED/04/2017 ஆம் இலக்க மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை | இரண்டு மில்லியன் ரூபாவுக்கு அதிகமான மதிப்பீட்டை மாகாண பொறியியலாளர் (கம்பஹா) அங்கீகரிக்க வேண்டும். பொல்கலாவத்தை சனசமூக நிலைய மதிப்பீடான ரூபா 4,872,672 தொழில்நுட்ப உத்தியோகத்தரால் 5 கட்டங்களுக்கு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை பிரகாரம் மதிப்பீடு அங்கீகரிக்கப்பட வேண்டும். | சபை அமுலாக்கவுள்ள கட்டிடத்தின் மொத்த மதிப்பீடும் தயாரிக்கப்பட்டு மாவட்ட பொறியியலாளரின் பரிந்துரை பெறப்பட்டு பிரிவுகளாக்கப்பட்டு குறித்த ஆண்டில் அமுலாக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் வருவாயிலும் கூடிய மீண்டுவரும் செலவினம் ரூபா 70,277,529 ஆகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 114,308,008 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2017 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2017 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 36,100 | 46,838 | 46,990 | 28,392 | 34,469 | 35,336 | 34,314 | 30,054 |
| (ii) | வாடகை | 1,155 | 923 | 932 | 29 | 1,593 | 1,022 | 1,045 | 8 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,530 | 1,266 | 1,948 | (682) | 980 | 1,187 | 1,187 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 155,220 | 155,220 | 98,088 | 57,131 | 190,026 | 179,686 | 71,298 | 14 |

## 2.2.2 தீர்வையும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறான பிரதேச சபையின் ரூபா 5,000 க்கு மேற்பட்ட தீர்வை நிலுவைக் கூறுகளது எண்ணிக்கை 446 ஆகும். அவற்றின் பெறுமதி ரூபா 4,974,340 ஆகும். இதனை அறவிடுவதற்கு அல்லது சொத்துத் தடை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தீர்வை நிலுவையை சொத்துத் தடை மேற்கொள்ள வேண்டும். | நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஆ) | 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டானை, ஆண்டி அம்பலம, ரத்தொலுவை, தெமல்ஹந்திய ஆகிய உப அலுவலகங்களில் நிலவிய தீர்வை நிலுவையில் 2018 டிசம்பர் 31 ஆந் திகதியளவில் அறவிடப்பட்டிருந்த சதவீதம் 33, 47, 47, 45 என்பன ஆகும். | நிலுவை அறவீடு அதிகரிக்க வேண்டும். | நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 26,732,184 தீர்வை நிலுவையில் 2019 மே 31 ஆந் திகதியளவில் அறவிடப்பட்ட தொகை ரூபா 7,469,604 ஆகும். ரூபா 19,262,580 மேலும் அறவிடப்பட்டுள்ளது. இவற்றுடன் 2,316 சொத்துக்களுக்குரிய ரூபா 8.348,793 க்கு சொத்துத் தடை விதிக்கப்பட்டுள்ளது. | நிலுவை அறவிடப்பட வேண்டும். | நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சமர்ப்பிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கை கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் எதிர்காலத்தில் செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்படும். |

## (ஆ) எதிர்பார்த்த நிறைவேற்று மட்டத்தை (Output) பெறாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 டிசம்பர் 31 ஆந் திகதிய உடன்படிக்கைக்குள்ளாகி சபையின் நிதியத்தின் மூலம் ஆரம்பமாகிய ரூபா 37,276,125 பெறுமதியான 09 செயற்திட்டங்கள் 2019 மே 31 ஆந் திகதியளவிலும் நிறைவேற்றுவதுடன் திணைக்கள விதிமுறைப்படி சபையின் நிதியிலிருந்து அமுலாகுவதற்கு மீளாய்வாண்டில் அமுலாக்கப்பட்ட ரூபா 1,855,474 பெறுமதியான 02 செயற்திட்டங்கள் அமுலாகவில்லை. | மதிப்பிடப்பட்ட செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். | தற்சமயம் அந்த செயற்திட்டங்களில் சில முடிவடைந்து ஏனையவை ஆரம்பிக்கப்பட்டுள்ளன. |

## (இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் 2015 - 2030 காலப்பகுதியின் போது அடைய வேண்டிய நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்திநோக்கங்களும் இலக்குகளும் இனங்காணப்பட்டு அவற்றை அமுலாக்குவதற்கு 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவனத்திற்கும் கடப்பாடு உள்ளது. எனினும், சபையானது நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கங்களையும் இலக்குகளையும் குறிப்பாகச் சமர்ப்பிக்காததுடன், நோக்கங்களையும் இலக்குகளையும் அளவிடுவதற்கும் ஒழுங்குபடுத்துவதற்கும் சுட்டிகளை இனங்காணுதல், அடிப்படைத் தரவுகளை இனங்காணுதல் மற்றும் வருடாந்த இலக்குகளை இனங்காணுதல் என்பன நடைபெறவில்லை. | நிலைத்து நிற்கவல்ல நோக்கங்களும் இலக்குகளும் இனங்காணப்பட வேண்டும். | கூட்டிணைந்த திட்டமானது (2019 - 2023) நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கங்களும், இலக்குகளும், சுட்டிகளும் அடிப்படைத் தரவுகளுக்கும் அமைய தயாரிக்கப் பட்டுள்ளதைத் தயவாகத் தெரிவிக்கின்றேன். |

### 3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | சபைக்குரிய வீதி நடைமுறையைப் பயன்படுத்துவதற்கு முடியமான போதும், 2018 ஏப்ரல் 05 முதல் மே 08 வரை 14 நாட்களுக்கு வாடகைக்குப் பெறப்பட்ட வீதி உருளையைப் பயன்படுத்தியதால் வெளிநபர்களுக்கு ரூபா 84,000 வழங்கப்பட்டிருந்தது. | சபையிடம் வாகனம் இருக்கையில் வாடகைக்குப் பெறலாகாது | இக்காலப்பகுதியின் போது சபைக்குரிய வீதி உருளை இடருக்கு உள்ளானதால் பயன்படுத்தப்பட முடியவில்லை. |
| (ஆ) | 2016 முதல் 2018 வரையான மூன்று ஆண்டுகளின் போது 2752 கட்டிட விண்ணப்பங்கள் பத்திரங்கள் பெறப்பட்டிருந்ததுடன், அவற்றுள் 113 க்கு மாத்திரமே இணக்கச் சான்றிதழ்கள் பெறப்பட்டிருந்தன. இணக்கச் சான்றிதழ்களைப் பெறாமை மற்றும் இதுவரை நிர்மாணிக்கப்பட்டிராத கட்டிடங்கள் சம்பந்தமாக வருவாய் பரிசோதகர்களால் தீர்வைக்கான பட்டியல் தயாரிக்கப்படாமையால் பெருமளவு தீர்வை சபை இழந்திருந்தது. | களப் பரிசோதனை மூலம் வருவாயை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அங்கீகரிக்கப்பட்ட நிர்மாண வேலைத் திட்டங்கள் குறித்த ஆண்டிலேயே முடிவடைந்து இணக்கச் சான்றிதழைப் பெறாது அநேக சந்தர்ப்பங்களில் நடவாது போவதால் அநேக விண்ணப்பதாரர்கள் வங்கிக் கடனின் இறுதித் தவணைப் பணத்தைக் கோரியுள்ளனர். |

### 3.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 1998 ஆம் ஆண்டில் பொது சபைக்கு ஒப்படைக்கப்பட்ட கொட்டு கொடவத்த காணியானது குறித்த பணிக்குப் | குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட வேண்டும். பொதுக் காணி | காணிகளும் வீடுகளும் அற்றவர்களுக்கு மனைகளை வழங்கும் நோக்கத்துடன் வீட்டுத் திட்டங்களை |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்படவில்லை. 1998 முதல் அங்கு 56 குடும்பங்கள் அத்துமீறிக் குடியேறியிருந்தனர். இவர்களிடம் உரித்துறுதி இல்லாத போதும், வரி மதிப்பிடப்பட்டு வரி அறவிடப்பட்டிருந்தது. உள்ளூராட்சி ஆணையாளரின் 2002 பெப்ரவர 05 ஆந் திகதிய கடிதத்திற்கமைய, அக்காணியில் குடியிருக்கும் 10 பேருக்கு அதில் குறிப்பிடப்பட்ட விற்பனை செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறயினும், பொதுப் பிரிவாக ஒதுக்கப்பட்ட 24 மார்ச்சளவில் ஒரு பிரிவு ஒரு நபருக்கு விற்பனை செய்யப்பட்டு ஏனைய 09 பிரிவுகளையும் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பொது பயன்பாட்டிற்குப் பயன்படுத்தப்பட வேண்டும். | அமுலாக்குவதற்கு கட்டானை பிரதேச அதனைச் சுவீகரித்து காணியில் குடியிருப்போரை பழைய மதிப்பீட்டின் படி சுவீகரிக்குமாறு கோரப்பட்டுள்ளது. சட்டத்திட்டத்திற்கமைய மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | காணி உப பிரிவாக்கலின் நில அளவைப் பத்திரம் சபையால் அங்கீகரிக்கப்படாத போதிலும், சொத்து விற்பனைக் கம்பனியால் கிம்புலாபிட்டிய அங்வெத்தும லிந்த மாவத்தையில் 94 பார்ச்சர்ஸ் காணி பிரிவுகளாக்கப்பட்டபோதும், சபை நடவடிக்கை எடுக்கவில்லை. | காணி உப பிரிவாக்கல் நில அளவை தொடர்பாக அங்கீகாரமின்றி நடவடிக்கை எடுக்கலாகாது. | உப --- அங்கீகாரம் பெறப்படும்வரை இதனை விற்பனை செய்யலாகாது என விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வேலை இடமாற்றம், சேவை விலகல், ஓய்வு பெறுதல் ஆகியவற்றால் 04 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 641,975 இடர்க்கடன் மீதியை அறவிடவில்லை. | ஊழியர் கடன் தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். | அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

## 3.5 சொத்து முகாமைத்துவம்

### 3.5.1 சொத்துக்களை பதிவேட்டில் பதியப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலையான சொத்துப் பதிவேட்டின் படி சபைக்குரிய ரூபா 385,040,395 பெறுமதியான காணிகளும் கட்டிடங்களும் ரூபா 63,224,405 பெறுமதியான மோட்டார் வாகனமும் வண்டிகளும் உள்ளதை 2018 வருடாந்த பொருட் கணிப்புச் சபை உறுதி செய்யவில்லை. | பரிசீலனை மூலம் நிலையான சொத்துக்கள் உள்ளதை உறுதி செய்ய வேண்டும். | நிர்மாண வேலைக் குறைபாடுகள் ஒப்பந்தக்காரர்களால் திருத்தம் செய்யப்பட்டன. |

## 3.6 பொருட் கொள்வனவு

### 3.6.1 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) 2014 ஆம் ஆண்டில் சபைக்குரிய பொல்காலவத்தை சனசமூக நிலைய நிர்ாண வேலை 2018 ஆம் ஆண்டில் போட்டியின்றி சபையில் பதிவு செய்யப்பட்டிராத ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்தது. 2014 முதல் 2018 வரை 05 ஆண்டுகளில் 5 கட்டங்களில் ரூபா 4,872,672 செலவிடப்பட்டிருந்தது. எனினும், வேலை முடியவில்லை. சுவர்ப் பூச்சு, கொங்கிறீட் வேலை, சீலிங் போன்றன நிறைவடையாது குறைவாக இருந்தன. | போட்டியுடனான பொருட் கொள்வனவின் மூலம் எதிர்பார்ப்பு பெறப்பட வேண்டும். | ஒப்பந்தகாரரால் குறைபாடு நீக்கப்படும். |
| (ஆ) திணைக்கள விதிமுறைப்படி அமுலாக்கப்பட்ட ஹீனடியன துட்டுகெமுனு மாவத்தை கொங்கிறீட் இடல் செயற்திட்டத்திற்கு ரூபா 1,000,000 மதிப்பீடு செய்யப்பட்டது. மொத்த மதிப்பீட்டில் 56 சதவீதமான ரூபா 561,939 நிச்சயமற்றதாக மதிப்பீடு | வீதியில் கொங்கிறீட் இடும்போது மதிப்பீட்டின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். வழங்கும் | கொங்கிறீட்டுக்கான இடைக்கால அறிக்கை இணைக்கப் பட்டுள்ளதுடன் இவ்வாறான தகவல்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய, வழங்க வேண்டிய ABC கலவை 8.9 கியூப் மதிப்பிடப்பட்ட போதும், கொடுப்பனவுக்கான அளவை அறிக்கைப்படி ABC கலவை 6.5 கியூப் ஆகும். எனினும், இதற்கான கொங்கிறீட் கலவை 300 அடிக்கான பாதைக்கு 9 கியூப் ஆக மதிப்பிடப்பட்டு வழங்கப்பட்டதால் ABC கலவை இடப்பட்ட வீதியின் 300 அடி நீளமும் கொங்கிறீட் இடப்பட்ட வீதியின் நீளத்திற்கும் இடையே கொங்கிறீட் கலவை 9 கியூப் ஆக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. வித்தியாசம் 81 அடி நீளம் ஆகவிருந்தது. தனியார் நிறுவனமே கொங்கிரீட் கலவை அறிக்கையை வழங்கியிருந்தது.

பதிவில் உள்ள தகவல்கள் குறைகளையும் அதிகரிப்பையும் காட்ட வேண்டும்.